**தலைப்பு – 5 அமைச்சரவை அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அமைச்சரவை அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சரவை அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 திட்டமிடல்

### 2.1.1 பெறுகைகள் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச சுற்றறிக்கை இலக்கம் 2/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 13 இன் 04 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டுக்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் செயன்முன்னேற்றம் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் திட்டத்தின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் கணக்காய்வினால் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் வருடாநத பெறுகைகள் திட்டம் மற்றும் பிரதான பெறுகைகள் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. | குறித்த சுற்றறிக்கையின் வழிகாட்டல்களின் பிரகாரம், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டினுள் மதிப்பிடப்பட்ட ரூபா 41,750,000 ஆன மொத்த மூலதனச் செலவினத்தில் ரூபா 21,837,350 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட மொத்த நிதியேற்பாட்டின் 52.3 சதவீதம் மாத்திரம் ஆகும். அவ்வாறான போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகையின் போது எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளின் சதவீதமொன்றாக உள்ளபடியாக பூர்த்தி 80 சதவீதமாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகையின் போது எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளின் சதவீதம் 52.3 சதவீதமாக உள்ளதுடன், தவறுதலாக செயலாற்றல் அறிக்கையில் 80 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகளை அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவையின் தீர்மானம் எடுக்கும் நடைமுறையை இலகுபடுத்தும் நோக்கில் 04 உப குழுக்கள் காணப்பட்டதுடன், அவற்றுள் 02 உப குழுக்கள் ஆண்டினுள் அமைச்சரவை தீர்மானம் எடுக்கும் நடைமுறையை இலகுபடுத்துவதற்கு உரிய துறைகள் அல்லது விடயங்கள் தொடர்பில் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்த அந்த உப குழுக்கள் மீளாய்வாண்டினுள் கூடிய தடவைகளின் எண்ணிக்கையை கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருக்காமையால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நியதிச்சட்ட பணிகள் தொடர்பான அமைச்சரவையின் உப குழு நீதிமன்றங்கள் அமைச்சினாலும் வாழ்க்கைச் செலவினம் தொடர்பில் அமைச்சரவையின் உப குழு வாணிப அமைச்சினாலும் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படுவதுடன், அந்த உப குழுக்கள் கூடிய தடவைகளின் எண்ணிக்கை தொடர்பிலான தகவல்களும் அந்த அமைச்சிடமிருந்து பெற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு பதிவு செய்து கொள்கின்றேன். | கணக்காய்வுக்கு தகவல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 கொண்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் உப இலக்கம் 06 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு நடாத்துவதற்காக 2021.12.15 ஆந் திகதிக்கு முன்னர் உரிய முறையில் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்ட போதிலும், கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக குறைந் எண்ணிக்கையான பதவியணியுடன் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றுநோய்க்கு உள்ளானமையால் மற்றும் அலுவலக நடவடிக்கைகள் லொயிடீஸ் கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டமையால், எதிர்பார்த்த திகதிகளில் குறித்த மதிப்பீட்டு பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு பணிகளை தாமதமின்றி மேற்கொண்டு, அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 2/2018 இன் பின்னிணைப்பு 2 மாதிரியிள் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்காக | கோவிட் தொற்றுநோய் காரணமாக அலுவலகத்திற்கு அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டதாலும், அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள தபால் | சுற்றறிக்கையின்படி மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையங்களில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டதாலும், பொருத்தமான பயிற்சி திட்டங்களுக்கான வெளிப்புற பயிற்சி நிறுவனங்களிடமிருந்து குறைவான அழைப்புகள் வந்திருந்தமையாலும், மனிதவள அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்க முடியவில்லை. | |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறைவற்ற பயிற்சி சந்தர்ப்பமொன்றை வழங்க வேண்டிய போதிலும், ஒட்டுமொத்த பதவியணியின் 82 உத்தியோகத்தர்களில் மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் முறையே 24 மணித்தியாலங்கள், 8 மணித்தியாலங்கள் மற்றும் 24 மணித்தியாலங்களுமாக ஆண்டினுள் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஊழியர் பயிற்சிகளின் செயன்முன்னேற்றம் 3.6 சதவீதம் ஆகும். | கொவிட் - 19 நிலைமை காரணமாக அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தியிருந்த காரணத்தால் மற்றும் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் - 19 நிலைமை காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 12 மணித்தியாலத்திற்கு குறைவற்ற பயிற்சி சந்தர்ப்பமொன்று உருவாகும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் பதவியணி 121 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி மற்றும் ஒப்பந்த பதவியணி முறையே 79 மற்றும் 03 ஆக காணப்பட்டதுடன், 39 வெற்றிடங்கள் நிலவின. | மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி காணப்பட்டமை காரணடாக போதிய இடவசதியை பெற்றுக்கொள்ளல் பிரச்சினைக்கு உரியதாக காணப்பட்டதுடன், தற்போதைய பதவியணிக்கு அங்கு போதிய இடவசதி காணப்படுகின்றமையால் நிலவும் வெற்றிடங்களுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்படுள்ளது. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |